RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21428

OPEN ACCESS

# பாலக்காடு மாவட்ட தமிழ் கிறித்துவ மற்றும் இந்துக்களின் திருமணச் சடங்கு முறை ஓர் ஒப்பீடு

**க. நெல்சன் [அ, *], க. சிவமணி [அ]**

[அ] தமிழ்த்துறை, சித்தூர் அரசு கல்லூரி, பாலக்காடு, கேரளா-678104, இந்தியா

# A comparison of the Marriage Rituals of Tamil Christians and Hindus in Palakkad district

**G. Nelson [a, *], K. Sivamai [a]**

[a] Department of Tamil, Chittur Government Arts College, Palakkad-678104, Tamil Nadu, India.

* Corresponding Author: nelsoncp@gmail.com

Received: 08-09-2021
Revised: 16-10-2021
Accepted: 23-10-2021
Published: 30-10-2021

Check for updates

## ABSTRACT

In the late 18th century, the Tamil people lived in Palakkad district of Kerala state from Tamil Nadu. In it, a study of the rituals of the life of Christians and Hindus reveals the method of planting the pandal in the marriage ceremony, the gifting, the land system, the thali tying, etc. Ritual in human life is "A regularity established by people for the people". It can be seen that this ritual is widely similar between the two religions.

**Keywords:** Ritual, Tamil Christians, Hindu, Palakkad district, Marriage ceremony, Kerala

## முன்னுரை

தமிழகத்தின் திண்டுக்கல், திருச்சி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் இருந்து 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கேரளா மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் குடியேரிய மக்களே, தற்போது பாலக்காடு மாவட்டதில் வாழ்ந்து வரும் தமிழ் இன மக்கள். இவர்கள் குடிபெயரக்காரணம் பஞ்சம், அல்லது போரின் காரணமாக இருக்கலாம் என்ற கருத்துக்கள் நிலவுகின்றன. 1830 ஆம் ஆண்டில் அருள் திரு. பிக்கோட் பிக்கேளர் (தேவபத்தி நாதர் என அறியப்பட்டவர்) பாலக்காடு பகுதியில் அமைந்துள்ள பங்குகளின் தோற்றம் பற்றி ஆராய்ச்சி நடத்தியுள்ளார், அடிகளாரின் பிரஞ்சு மொழியில் அமைந்துள்ள குறிப்புகள் பாலக்காடு தமிழ் கிறித்தவர்களின் வரலாற்றினை அறிய துணைசெய்கின்றது. மேலும் இவர்கள் குடிபெயர்ந்து வந்ததற்கான ஆதாரங்கள் தமிழ்கிறித்தவர்கள் திருமண சடங்கில் பரிசம் போடுதல் என்ற நிகழ்ச்சியின் மூலம் நம்மால் அறிய முடிகிறது. பாலக்காடு மாட்ட தமிழ் கிறித்துவ மற்றும் இந்துக்களின் திருமணச் சடங்கு முறைகளை பின் வருமாறு காண்போம்.

## திருமணச் சடங்குகள்

மனித வாழ்வின் இன்றியமையாத நிகழ்வுகளில் திருமணமும் ஒன்று. மனித சமுதாயத்தின் பண்பாட்டு வெளிப்பாடாக திருமண நிகழ்வு அமைந்துள்ளது. திருமணம் என்ற சொல்லின் ஆழ்ந்த பொருளை ஆராய்ந்தால் பல அரிய கருத்துகள் புலனாகின்றன. ஒரு கண்ணிப் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டி, அவளை ஊரும் உறவும் அறிய தன் மனதிற்குப் பிடித்தவளாகவும், வாழ்க்கைத்

துணையாகவும் ஒருவன் ஏற்றுக் கொள்வது 'திருமணம்' ஆகும். திருமண நிகழ்ச்சி ஒன்றானாலும் அதில் பின்பற்றப்படும் சடங்கு முறைகள் வேறுபடுகின்றன.

இலக்கண நூலான தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியலில் இரண்டு அருமையான நூற்பாக்கள் திருமண பொருத்தங்கள் எப்படி அமையவேண்டும் என்பதையும், எப்படி அமைய கூடாது என்பதையும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன (Ilampuranar, 1971). இவற்றின் மூலம் பொருத்தம் பார்க்கும் பழமையான பழக்கம் தமிழர்களிடம் இருந்ததை உண்ரமுடிகின்றது. இல்லறம் மேற்கொள்ளும் மணமக்களின் நன்மையையும், நல்வாழ்வையும் கருத்தில் கொண்டு அவை அன்றைக்கு போலவே இன்றும் என்றும் யாவருக்கும் பொருந்தக் கூடியவையாக அமைந்துள்ளது (Sasivalli, 1985).

## சாதகம் பார்த்தல்

திருமணம் செய்ய விரும்பும் பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் சாதகத்தைச் சோதிடரிடம் கொடுத்துப் பார்க்கின்றனர். சோதிடர் கூறிய திசையில் வரன் பார்க்கின்றனர். அவ்வாறு அமையவில்லை என்றால் வசதிக்கேற்ப ஏனைய திசைகளில் சென்று பார்க்கின்றனர். உறவினர்களின் மூலம் வரும் சாதகத்தைப் பெற்றும் பத்துப் பொருத்தங்கள் பொருந்தியிருக்கின்றனவா என்று இருவீட்டாரும் ஆராய்வர். இது தொல்காப்பியர் சுட்டிய,

“பிறப்பே குடிமை ஆளுமை அன்போடு உருவு நிறுத்த காமவாயில் நிறையே அருளே

உணர்வோடு திருவென முறையும் விளைந்த கோபினத் வகையே” தொல். பொருள்- 273

என்ற பத்து பண்பினை நினைவு கூறுவதாக உள்ளது. சாதகத்தில் காணும் பத்துப் பொருத்தங்களாவன.

1. தினப் பொருத்தம் அல்லது நட்சத்திரப் பொருத்தம், 2. கணப்பொருத்தம், 3. மகேந்திரப் பொருத்தம், 4. ஸ்திரி தீர்க்கப் பொருத்தம், 5. யோனிப் பொருத்தம், 6. இராசிப் பொருத்தம், 7. இராசி அதிபதிப் பொருத்தம், 8. வசியப் பொருத்தம், 9. இரட்சுப் பொருத்தம், 10. வேதைப் பொருத்தம் ஆகியன ஆகும். பத்துப் பொருத்தங்களில் ஏழு பொருத்தங்கள் ஒற்றுமை பெற்றிருந்தாலும் பெண் பார்க்கச் செல்கின்றனர் இந்து மதத்தினர்.

ஆனால் கிறித்தவத்தில் “திருமணம் என்பது ஒரு ஆணையும், ஒரு பெண்ணையும் சாகும் வரை பிரிந்து போகாமல், சட்டப்படி இணைக்கவும் அவர்கள் ஒருவரையொருவர் பரிசுத்தமாய் அன்பு செய்யவும், அவர்களுக்குக் கடவுள் அளிக்கும் பிள்ளைகளை விசுவாசத்தில் வளர்க்கவும் அதற்குத் தேவையான அருளையும் அளிக்கிற அருட்சாதனமே திருமணம். என்கிறார் அருட். சில்வஸ்டர் டீ குரூஸ்.” மேலும் கிறித்துவ முறைப்படி திருமணம் செய்வதற்கென்று சில விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது. அவை

1. குறைந்த வயது - இருபத்தி ஒன்று வயது முடியாமல் ஆணுக்கும், பதினெட்டு வயது முடியாமல் பெண்ணுக்கும் நடத்துகிற திருமணம் செல்லாது.

2. திருமணக் கடமை - நோய்வாய்ப்பட்டு உடல் நலம் குன்றியவர்கள் திருமணம் செல்லாது.

3. திருமணக்கட்டு - ஏற்கனவே திருமணம் முடித்தவர், வேறு திருமணம் செய்தல் செல்லாது.

4. மதவேறுபாடு-, கிறித்துவர்கள் அல்லாதவரோடு திருமணம் செய்யக்கூடாது (தற்காலத்தில் இந்நிலை மாறியுள்ளது, வேறு மதத்தினைச் சேர்ந்த ஆண் அல்லது பெண்ணை திருமணம் செய்வதற்கு முன்பு கிறித்துவ முறைப்படி ஞானஸ்தானம், உறுதி பூசுதல், நற்கருணை ஆகிய மூன்று அருட்சாதனங்களையும் பெறவேண்டும்)

5. இரத்த உறவு - நான்காம் தலைமுறை உட்பட இரத்த உறவு உள்ளவர் இடையில் நடத்தப்படும் திருமணம் செல்லாது. தற்போது இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டு இரத்த உறவு உள்ளவரையும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று நம்புகின்றனர்.

6. துறவு வாழ்வு மேற்கொண்டவர்கள் திருமணம் செய்தல் கூடாது.

7.கொலைச் செயலைப் புரிந்துவிட்டு, அதாவது கணவன் மனைவியையோ, மனைவி கணவனையோ கொன்று விட்டு வேறு ஒருவரை திருமணம் செய்வது தகுதியற்றது.

8. தகாத உறவு மூலம் ஏற்படும் இரத்த பந்தங்கள் திருமணத்தை செல்லாததாக்குகிறது.

இவை அனைத்தும் திருமணத்தை தகுதி இல்லாததாக்கும் தடைகள். இவை போன்ற தடைகள் இருப்பின் கிறித்துகளிடையே திருமணம் செய்து கொள்ள அனுமதிப்பதில்லை.

## மகட்பேசுதல்

பெண் பார்த்தல் என்ற நிகழ்ச்சிக்கு மகட்பேசுதல், மகள் மொழிதல், மணமகள் தேர்வு முதலிய பல பெயர்கள் உண்டு. இப்பெயர்களுக்கு 'பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கக் கோருவது என்று பொருள்'.

இந்துக்கள் திருமணத்திற்குச் சாதகம் பொருந்தியிருந்தால் பெண்ணைப் பார்க்கச் செல்வார்கள். முதலில் பெண் வீட்டாருக்கு மாப்பிள்ளை வீட்டார் வரும் நாளை உறவினர்கள் மூலமாகவோ அலைபேசி தெரிவிக்கின்றனர். அறிவிப்புகள் இல்லாமலும் சென்று பெண் பார்க்கும் வழக்கம் உள்ளது. மணமகன் வீட்டார் ஒற்றைப்படை எண்ணிக்கையில் பெண் பார்க்கச் செல்கின்றனர். தற்காலத்தில் மாப்பிள்ளையும் அழைத்துச் செல்கின்றனர். இந்நிகழ்ச்சியை. "இந்திரன் உள்ளிட்ட தேவற்குலமெல்லாம் வந்திருக்க தென்னை மகட்பேசி மந்திரித்து 12 என்று நாச்சியார் திருமொழிப் பாடல் மூலம் பெண் பார்ப்பது ஒரு சடங்காகக் கடைப்பிடிக்கப்பட்டதனை அறியமுடிகிறது. பெண்பார்க்கச் செல்லும் போது செவ்வாய் மற்றும் சனிக்கிழமையை தேர்ந்தெடுப்பதில்லை (Annarangachari, 1986). இவ்விரு நாட்களில் எச் செயல் செய்தாலும் நன்மை தராது என்ற நம்பிக்கை இக்குல மக்களிடையே நிலவுகிறது.

ஆனால் கத்தோலிக்க கிறித்துவர்கள் ஒரு வரன் அமைந்து விட்டால் ஒரு குறிப்பிட்ட தினத்தை தீர்மானித்து ஆண் வீட்டார் உறவினர்களோடு பெண் வீட்டிற்குச் செல்கின்றனர். இரு வீட்டாருக்கும் திருமணத்தில் சம்மதம் ஆகிவிட்டால், பெண் வீட்டில் வைத்து தங்களது காணியைச் சொல்லி (குலவரலாறு) தட்டை மாற்றிக் கொள்கின்றனர். இவ்வட்டாரத்தில் உள்ள மக்கள் நல்ல நேரம், நல்ல நாள் பார்க்கும் வழக்கம் வைத்துள்ளனர். ஆனால் சாதகம் பார்ப்பது கிடையாது. இப்பெண் பார்க்கும் நிகழ்வை மலையாள கிறித்துவர்கள் மனசம்மதம் என்று குறிப்பிடுகின்றனர், இவர்கள் மனசம்மத விழாவை, திருமண விழாப்போல், பெண் வீட்டில் வைத்துக் கொண்டாடுகிறார்கள். கத்தோலிக்க கிறித்துவர்கள் பெண் பார்க்கும் சடங்கின் போது ஆண் வீட்டார். பெண்ணுக்கு தங்கச் சங்கலியோ, மோதிரமோ அணிவிப்பார்கள். இவ்வாறு நடந்தால் பாதித் திருமணம் முடிந்ததாக மக்கள் கருதுகின்றனர் (Joseph Beski, 2014).

## முகூர்த்த ஓலை எழுதுதல்

பரிசம் போட்ட பிறகு இரு வீட்டாரும் சேர்ந்து சோதிடரை வைத்து மண ஓலை எழுதுகின்றனர். அவர் நட்சத்திரம், லக்னம், திதி, வாரம் இவைகளைக் கூர்ந்து நோக்கிச் சித்த அமிர்தயோகத்தில் திருமண நாளைக் குறித்துத் தருவார். அந்நாளை எடுகளில் குறித்து, அதன் நான்கு மூலைகளிலும் சந்தனம், குங்குமம் வைத்துத் தருவார். சிலர் அந்தணரிடமும் குறித்து வாங்கிக் கொள்வது இந்துக்களின் முறையாகும்.

கிறித்துவர்கள், 'மண ஒப்பத்தம்' முடிந்த பிறகு, ஆண்வீட்டாரும், பெண் வீட்டாரும் அவரவர் தேவாலயத்திற்கு சென்று பங்குத் தந்தையை சந்தித்து திருமண தேதியை குறிப்பிடுகின்றனர். மணமக்களின் முழு விவரமும் அங்கு கொடுக்கப்படுகிறது. அதன் பின் மணமகனுக்கும், மணமகளுக்கும் அருட்தந்தை ஒரு விண்ணப்பத்தைக் கொடுப்பார், அவ்விண்ணப்பத்தை இருவரும் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். திருமண ஓலை எழுதும் பொழுது தேவாலயத்தில் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். திருமணத்திற்கான ஒப்புதலை தேவாலயத்திலிருந்து பெற்ற ஞாயிறு முதல் மூன்று வார ஞாயிற்றுக் கிழமை திருப்பலியில், 'திருமண ஓலை' வாசிக்கப்படுகின்றது. இவற்றில்

ஏதாவது தடைகள் இருந்தால் பங்குத தந்தையிடம் அறிவிக்கும் பொறுப்பு மக்களுக்கு உண்டு. இவ்வாறு முகூர்த்த ஓலை எழுதும் பழக்கமானது இரு மதத்திலும் காணப்படுகிறது. தங்களது மதக் கட்டுப்பாட்டிற்கு ஏற்ப வெவ்வேறு முறையில் இச் சடங்கினை செய்கின்றனர்.

## பரிசம் போடுதல்

பெண்ணைப் பிடித்திருந்தால் தமிழ் கிறித்தவர்கள் "பரிசம் போடும்' சடங்கினை செய்கின்றனர். இதனைப் 'பரியம்" என்றும் கூறுவர். இந்தச் சடங்கிற்காகத் தேங்காய், பழம், குங்குமம், பூ மாலைகள், இனிப்பு வகைகள், விரலி மஞ்சள், பெண்ணிற்குரிய புத்தாடைகள் முதலிய பொருட்களைக் கோவிலிலிருந்து ஊர்வலமாக மேளதாளத்துடன் எடுத்து வருகின்றனர். தாம்பூலத் தட்டில் பரிசப் பணமாக பதினொன்றே கால்" ரூபாய் வைக்கின்றனர்.

இதனை கிறித்துவ மக்கள் "முடுப்பு" என்று கூறுவர். குல மணப்பெண்ணுக்கு சீர் செய்வதற்கு முன்பு திருமண பெண்ணின் தாய் மாமனும், ஆணின் தாய் மாமனும் வாசலின் நடு மத்தியில் அமர்ந்து முக்காலி வைத்து, அதன் மேல் ஒரு தட்டில் எல்லா நவ தானியங்களையும், முடுப்பையும் வைப்பர். இரு வீட்டாரும், தங்கள் காணி முறைகளை கூறி தட்டை மாற்றிக் கொள்வார்கள். பரிசம் முடிந்ததும், ஆண் வீட்டார் கொண்டுவந்த புடவையைக் கட்டி பெண்ணை அலங்கரித்து சபை முன்னிலைப் படுத்துவர். தற்போதுவரை கிறித்துவ இன மக்களிடம் இப்பரிசம் போடும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

இந்துகளின் பரிசம் போடும் முறையானது இதிலிருந்து சற்று மாறுபட்டு காணப்படுகிறது. "இரு வீட்டாரும் எதிர்முகமாக அமர்ந்து, சந்தனம் மற்றும் குங்குமம் ஒருவருக்கொருவர் வைத்துக் கொள்கின்றனர். பின்னர் சம்பந்திகள் இருவர் கழுத்திலும் மல்லிகை மாலையை அணிவித்து, பானகம் அருந்துகின்றனர். இருவரும் தாம்பூலத் தட்டை மாற்றிய பிறகு மணப்பெண்ணின் விரலில் மணமகனின் சகோதரியே மோதிரத்தை அணிவிப்பாள் மேலும் "இம்மக்களிடையே 'காணி' என்ற முறை பயன்படுத்தப்படுவதில்லை"

பரிசம் போடும் சடங்கானது திருமணத்திற்கு முந்தைய நிகழ்வாக கிறித்துவர்கள் நடத்துகின்றனர். ஆனால் இந்துக்கள் பரிசம் போடும் சடங்கு முடிந்த பிறகே முகூர்த்த ஓலை எழுதுதல், திருமாங்கல்யம் செய்யக் கொடுத்தல். அழைப்பிதழ் அச்சடித்தல், பட்டாடைகளை வாங்குதல், பாக்கு வைத்தல் போன்ற சடங்கு முறைகளை செய்கின்றனர்.

## பந்தக்கால் ஊன்றுதல்

மங்கல நிகழ்ச்சிகளுக்குப் பந்தல்தான் எடுத்துக்காட்டாகவும், அழகாகவும் அமைகிறது. மணமக்களின் வாழ்க்கைத் தீபத்தை ஏற்றி வைக்கும் சடங்கு பந்தலின் கீழ் நடப்பதால், பந்தலுக்கு எத்தகைய குற்றமும் நேராமல் நல்ல முறையில் திருமணம் நடைபெறுவதற்காக நடும் பந்தல் காலை, இறைவனை வழிபட்டு நடுகின்றனர். திருமணம் நடைபெறுவதற்கு ஏழு நாட்கள் முன்னரே பந்தல் காலை நடுகின்றனர். இரு. வீட்டாரும் ஒரே நேரத்தில் பந்தல் நடவேண்டுமென்ற கட்டாயமில்லை. பந்தல் காலை ஊன்றுவதற்குச் சோதிடம் நல்ல நாள் நேரம் முதலியவற்றைக் குறித்து வாங்கிக் கொள்கின்றனர். சோதிடர் குறித்து கொடுத்த தினத்தில் இரு வீட்டாரும் அவரவர் வீட்டில் பந்தல் கால் நடுகின்றனர், முதலில் வீட்டின் வடகிழக்கு மூலையில் குழியைத் தோண்டுகின்றனர். பின்னர் பாலமரம் ஒன்றை வெட்டித் தண்ணீரால் தூய்மை செய்கின்றர். அம்மரத்தில் மாவிலை. தருப்பைப்புல், பூ ஆகியவற்றையும் கட்டுகின்றனர். தற்காலத்தில் பாலூறும் மரங்கள் கிடைக்காததால் சவுக்கு, மூங்கில், தேக்கு போன்ற மரங்களை பந்தல்காலாக நடுகின்றனர். மணமக்களின் உடன் பிறந்தவர் உள்ளிட்ட மூவர் மூங்கில் குச்சியின் கீழிருந்து மேலாக மஞ்சள், சந்தனம், குங்குமம் ஆகியவற்றைத் தடவுகின்றனர். இத்துடன் பால மரக்குச்சினையும் இணைத்துக் கட்டுகின்றனர். மஞ்சள் நீரில் நனைத்துக் காய வைத்த ஒரு புதுத்துணியில் நவதானியம், பருத்திக் கொட்டை, பதினொன்றேகால் ரூபாய் போன்றவற்றைப் பந்தல்காலில் முடிந்து வைக்கின்றனர். இரண்டடி ஆழமுள்ள குழியில் பால்,

நவதானியம், சந்தனம், குங்குமம், மலர் போன்ற பொருட்களைப் போடுகின்றனர். பின் மாவிலையோடு நிறை சொம்பு நீர், தேங்காய், பழம், கற்பூரம், ஊதுபத்தி வைத்து விளக்கேற்றி பிள்ளையாரை. "மூல முதல்வனே முக்கண்ணனே அம்மையப்பனே இத் திருமண முயற்சி எவ்விதக் குறைவுமின்றி இனிதே நடைபெற உன்பாத மலர்களை வணங்கி இப்பந்தல் காலை ஊன்றுகின்றோம்" என்று வணங்கிப் பந்தல்காலைத் தூக்கிக் குழியில் பெண் மக்கள் மூவர் துணையுடன் ஊன்றுகின்றனர்.

இதிலிருந்து சற்று மாறுபட்டு கிறித்துவர்கள் பந்தல்கால் ஊன்றுகின்றனர். திருமணத்திற்கு மூன்று வாரங்களுக்கு முன்பு அதாவது தேவாலையத்தில் ஓலை எழுதும் நாளன்று பந்தல் கால் ஊன்றுகின்றனர். இதனை 'முகூர்த்த கால் போடுதல்' என்றும் இம்மக்கள் அழைப்பர். மூங்கில் மரத்தையே இச்சடங்கு முறைக்கு தற்போது பயன்படுத்துகின்றனர். "திருமண வீட்டைச் சுற்றியுள்ள பெரியோர்களை அழைத்து, வெள்ளைத் துணியில் மஞ்சள் தடவி, அத்துணியின் உள்ளே நவதானியங்களை வைத்துக் கட்டுவார்கள். மூங்கில் குச்சியில் சிறிய சிலுவையைத் தயார் செய்து அதில் கண்ணாம்பு தடவி, நவதானியங்களையும் மா இலையையும், பூக்களையும் அதனோடு சேர்த்து மூங்கிலின் மேல் கட்டுவார்கள். அதன் பின்பு திருமண வீட்டாரும். சுற்றியுள்ள பெரியோர்களும் இணைந்து, கண்ணித்தாய்க்கு (மாதாவுக்கு) பாடல் பாடி இறைவனை வணங்கி பந்தல் கால் நடுகின்றனர்."

## ஆரத்தி எடுத்தல்

மணமகனுக்கு கொழுந்தியார் (மணமகளின் தங்கை) முறையுள்ள பெண்கள் அல்லது மணமகளின் உறவுப் பெண்கள் குடத்தில் ஏற்றப்பட்ட நெய் விளக்கு, முளைப் பாலகை, மஞ்சளும் சுண்ணாம்பும், வெற்றிலையும் கலந்த ஆரத்தி நீர் ஆகியவற்றால் ஆரத்தி எடுக்கின்றனர்.

ஆரத்தி எடுப்பவருக்கு மணமகன் அல்லது மணமகள் பணம் வைத்துக் கொடுக்கும் வழக்கம் காணப்படுகிறது" பிரம்மச்சரிய வாழ்வை உதறிவிட்டு வரும் மணமகனை வரவேற்கும் முகமாகவும், கண்ணேற்றின் தாக்குதலிலிருந்து காக்கும் விதமாகவும் "ஆரத்தி எடுத்தல்" சடங்கு செய்யப்படுகின்றது. இச்சடங்கு முறை இரண்டு இன மக்களிடமும் ஒரே போன்று காணப்படுகின்றது. மேலும், தேவாலையங்களில், திருவிழாவின் போது குருக்களுக்கு ஆரத்தி எடுக்கும் முறை இன்றளவும் நடைபெற்று வருகிறது. இவ்வழக்கம் இந்துக்களிலிருந்து வந்தது என அறிய முடிகிறது.

## மோதிரம் அணிவித்தல்

மணமகனின் மைத்துனர் இச்சடங்கு முறையைச் செய்கின்றார். மணமகளின் பாதத்தைப் பாலாலும், நீராலும் கழுவி, மலர் தூவுகின்றனர். பின்பு அவர் தங்க மோதிரத்தை மணமகனுக்கு அணிவிக்கின்றார். மணமகன் வீட்டார் மைத்துனருக்குப் புத்தாடையுடன் தாம்பூலத் தட்டை வழங்கிப் பெருமைப் படுத்துகின்றனர். இச்சடங்கு முறையை "மச்சினன் மோதிரம் போடுதல்" என்று இக்குல மக்கள் வழங்குகின்றனர். மாமன் மச்சான் உறவு முறையை வலுப்படுத்துவதற்காக இச்சடங்கு முறையை செய்கின்றனர். மணமகன் வீட்டார் மைத்துனருக்குப் புத்தாடையுடன் தாம்பூலத் தட்டை வழங்கிப் பெருமைப் படுத்தும் முறை செய்தல் சடங்கு மட்டும் கிறித்துவர்களிடத்தில் காணப்படுவதில்லை.

## தாலி அணிவித்தல்

மணமகன், மணப்பெண்ணின் கழுத்தில் திருமணச் சின்னமான தாலியை அணிவிப்பது. 'இருவரும் ஒருவர் ஆனோம்' என்ற தத்துவத்தை வெளிப்படுத்துகிறது. மக்கள் மதத்தாலும், குலத்தாலும் வேறுபட்டு இருந்ததாலும் திருமண நிகழ்வின் போது தாலி அணிவித்தல் சடங்கு குறிப்பிடத்தக்கதாகும். "நமது நாட்டில் நாணில் தாலியைக் கோர்த்து மணமகன், மணமகள் கழுத்தில் அணிவித்தல்தான் திருமணத்தில் இன்றியமையாத கட்டமாக இருக்கிறது எனவும் தாலி கட்டலின் போது எதை அணிவித்தாலும் நான் வேறு நீ வேறு அல்லேம் என்ற தத்துவாம் அடங்கியிருக்கிறது"

என்று பி.என். சண்முக சுந்தரம் கூறியுள்ளார். மணமகன், மணப்பெண்ணிற்குத் தாலி அணிவித்து ஒரு முடிச்சு மட்டும் போடுகின்றான். மணமகனின் சகோதரியே மீதமுள்ள இரண்டு முடிச்சுகளையும் போடும் வழக்கம் இக்குல மக்களிடம் காணப்படுகிறது. சில இடங்களில் மணமகனே மூன்று முடிச்சுகளையும் போடும் வழக்கமும் நிலவுகிறது. முதல் முடிச்சு கணவனுக்கு கட்டுப்பட்டவள் என்றும் இரண்டாவது முடிச்சு தாய் தந்தையர்க்குக் கட்டுப்பட்டவள் என்றும், மூன்றாம் முடிச்சு தெய்வத்திற்குப் பயந்தவள் என்றும் கூறுகின்றனர். மணமகன் தாலி கட்டும் போது.

"மாங்கல்யம் தந்துநா அநேன மமஜீவா ஹேதுநா

கண்டே பதநாம் சுபகேத்வம் ஜீவசரதச் சதம்..... "

என்று அந்தணர் கூறுகின்றனர். இச்சுலோகத்தில் ஆழ்ந்த பொருள் இருப்பதை உணர முடிகிறது. 'என்னுடைய இன்பமான வாழ்க்கைக்கு ஆதாரமாகவும், காரணமாகவும் விளங்கும் உனக்குத் தாலியை அணிவிக்கின்றேன். நூறாண்டு வாழ்வாயாக என்று மணமகன் தாலி கட்டும் நேரத்தில் கூறுவதையே அந்தணர் சுலோகமாகக் கூறுகின்றனர். இவ்வாறு இந்துக்கள் தாலி கட்டிக் கொள்கின்றனர்.

கிறித்துவர்களின் மதத்திற்கு ஏற்றவாறு சில சடங்குகளை மாற்றி திருமணம் செய்கின்றனர். வீட்டில் பரிசம் முடிந்ததும் தேவாலயத்தில் "திருமணம்" நடைபெறுகின்றது. திருப்பலியில் திருமண ஆணும், பெண்ணும் அருட் தந்தையர்களின் முன்னிலையில் வாக்குறுதி கொடுப்பர் (BSI, 2004). மணமக்களின் மனக்கருத்தை அறிந்து திருச்சபையின் முன்னிலையில் பெண் அருட்தந்தை மணமக்களிடம் வினாக்கள் கேட்கிறார். அவை.

1. நீங்கள் இருவரும் எவ்வித வற்புறுத்தலுமின்றி முழுமன சுதந்திரத்துடன் திருமணம் செய்து கொள்ள இங்கு வந்திருக்கிறீர்களா?

2. நீங்கள் மணவாழ்க்கை நெறியை பின்பற்றி வாழ்நாளெல்லாம் ஒருவரை ஒருவர் நேசிக்கவும் மதிக்கவும் தயாராயிருக்கின்றீர்களா?

3. இறைவன் உங்களுக்கு அருளும் மக்களை நீங்களும் அன்புடன் ஏற்று, கிறித்துவின் போதனைக்கும். திருச்சபையின் சட்டத்திற்கும் / ஏற்றபடி வளர்ப்பீர்களா? போன்ற வினாக்களை அருட்தந்தையர் கேள்விகளுக்கு தகுந்த பதிலை தங்கள் தெரிவிக்கின்றனர். மேலும், மணமக்களிடம் மனக் கருத்தை கேட்க. இன்பத்திலும் துன்பத்திலும் உடல் நலத்திலும் நோயிலும் நான் உனக்கு பிரமாணிக்கமாயிருந்து என் வாழ்நாளெல்லாம் உன்னை நேசிக்கவும், மதிக்கவும் வாக்களிக்கிறேன்.

என்பதை மணமகனும், மணப்பெண்ணும் கூற பிற சடங்குகள் நிறைவேற்றப்பட்டு தாலியை பங்குத் தந்தை ஆசிர்வதித்துத் தர மாப்பிள்ளை தாலியை பெண்ணின் கழுத்தில் கட்டுவார்.

## மிஞ்சி அணிவித்தல்

மணமகனுக்கு மைத்துனன் முறையுள்ளோர் "மிஞ்சி அணிவிக்கும்" சடங்கினைச் செய்கின்றனர். "மணமகனின் காலைத் தம் இருகரங்களால் தாம்பளத்தில் எடுத்து வைத்துப் பாலாலும், நீராலும் கழுவித் தூய்மை செய்கின்றான். பின்பு மஞ்சள் குங்குமம் வைத்து மலர் தூவி பெருவிரலுக்குப் பக்கத்து விரலில் மிஞ்சினை அணிவிக்கின்றான். மிஞ்சி அணிவித்தவருக்கு மணமகன் வீட்டார் தாம்பூலத் தட்டைக் கொடுக்கின்றனர். இம்மிஞ்சியை மூன்றாம் நாள் கழற்றி விடுகின்றனர்" இல்லற வாழ்வில் ஈடுபடும் முன்னர் இளமை வாழ்வில் இருப்பவனுக்கு அணிமணிகள் அணிய உரிமையில்லை. எனவே முதலணியாக அவனுக்கு அணிவிக்கப்படும் மிஞ்சி என்னும் அணி திருமண வாழ்வில் பொறுப்புணர்வுகளைச் சுட்டிக்காட்டும். "கால் கட்டு" என்பதை உணர்த்துகிறது. திருமணத்தின் போது மணமகன் காலில் மிஞ்சி அணிவிக்கும் வழக்கம் இன்றும் இரு மத மக்களிடமும் தொடர்கிறது.

### அரிசி, உப்பு, பருப்பில் கைவைத்தல்

மணமக்களை அழைத்து வந்து புதுப்பாயில் அமர வைக்கின்றனர். அரிசி, உப்பு, பருப்பு ஆகிய மூன்று பொருட்களைத் தனித்தனியாக தாமபாளத்தில் வைத்து மணமக்கள் முன் வைக்கின்றனர். இம் மூன்று பொருட்களிலும் மணமக்கள் கைவைத்து மூன்று முறை அள்ளிப் போடுகின்றனர். இது இந்துக்களின் முறையாகும்.

கிறித்துவர்கள் அரிசி, உப்பு, தண்ணீர் ஆகிய மூன்று பொருட்களைத் தனித்தனியாக பாத்திரத்தில் வைக்கின்றனர். மணமக்கள் இறைவனை வணங்கிக் கொண்டு தமது இரு கைகளையும் அப்பொருட்களில் வைத்து வணங்குகின்றனர். இம் மூன்று பொருட்களும் வாழ்க்கை முழுவதும் கிடைக்க வேண்டும் என்பதற்காக இச்சடங்கு முறையை இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர்.

### பணியாரக்குடம் கொடுத்தல்

மணப் பெண்ணிற்குச் சீர்வரிசைகளுடன் பணியாரக் குடத்தையும் வழங்குகின்றனர். திருமண நாளில் இச்சடங்கைச் செய்யும் வழக்கமும் நிலவுகிறது. இதனைப் பலகாரக்குடம்' என்றும் கூறுவர். பல காரங்கள் நிறைத்துத் தருவதால் இப்பெயர் பெற்றுள்ளது. பணியாரத் குடத்தில் அரிசியால் செய்த பணியாரம், முறுக்கு. காரவகை, இனிப்புவகை, உளுந்து வடை போன்ற பொருட்களைப் பித்தளைக் குடத்தில் பச்சரிசி நிரப்பி அதற்குமேல் வைக்கின்றனர். பழம் தேங்காய்களைத் தாமபூலத் தட்டில் வைத்துக் கொடுக்கின்றனர்." இச்சடங்கினை இரு இன மக்களும் எவ்வித வேறுபாடுமின்றி செய்கின்றனர்.

### மறுவீடு அழைத்தல்

மணப்பெண் வீட்டிலிருந்து மணமக்களை மறுவீடு அழைத்துச் செல்கின்றனர். மணமகள் வீட்டார் பெண்ணுக்குச் சீதனங்களாகப் பாத்திரங்கள். கட்டில், மெத்தை, புத்தாடைகள் உள்ளிட்ட பல பொருட்களைக் கொடுத்து அனுப்புகின்றனர். சீதனம் மணமகன் வீட்டார் மணமகளுக்கு கொடுத்துள்ளனர். "இராமன் தாயார் இராமனுக்கு ஏற்ற பெண் சீதை என்று களிப்படைந்து. அளவில்லாத கோடிக்கணக்கான பொற்காசுகளையும், கோடிக்கணக்கான அரிய ஆபரணங்களையும், பரிவாரத்திற்குரிய பெண்கள் கூட்டத்தையும் இடமகன்ற சில நாடுகளையும் விலை மிக்க பட்டாடைகளையும் பெண்களுக்குத் தெய்வம் போல சிற்றந்த சானகி பெறுவாயாக என்று கூறிக் கொடுத்தனர்" என்ற வி.சி. சசிவல்லியின் கூற்றிலிருந்து மணமகனுக்குச் சீதனம் கொடுத்திருப்பது புலனாகிறது. இச்சடங்கு கால மாற்றத்தால் மணமகளுடன் சீர் வரிசை கொடுக்கும் வழக்கமாக மாறியுள்ளது. இரு மத மக்களும் சீர்வரிசை வழங்கியே பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கின்றனர் என்பதை அறிய முடிகிறது.

### முடிவுரை

பாலக்காடு மாவட்ட தமிழ் கிறித்துவர்களுக்கும், இந்துகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை அறிவதற்கு அடிப்படையாக அமைவது, திருமணச் சடங்காகும், இச்சடங்குமுறையில் சாதகம் பார்ப்பது இந்துக்களை போன்றே கிறித்தவர்களுக்கென சில விதிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. மகட்பேசும்பொழுது காணிமுறை (குலவரலாறு) பற்றி கூறுவது கிறித்தவர்களுக்கு மட்டுமே உரிய மரபாகும். பந்தக்கால் நடும் முறையில் இந்துக்கள் பிள்ளையாருக்கு பாடல் பாடுவது போன்று கிறித்தவர்கள் மாதாவுக்கு பாடல் பாடுவது வழக்கமாக உள்ளது. மணமகன் தாலி கட்டும் நேரத்தில் அந்தணர் சுலோகமாகக் கூறி இந்துக்கள் தாலி கட்டிக் கொள்கின்றனர், ஆனால் கிறித்துவத்தில் தாலிகட்டும் முறையானது திருவிவிலியத்தின் முறைப்படி நடைபெறுகின்றது. இச்சடங்கின் மூலமாக இரு இனத்தாருக்கிடையேயுள்ள நெருக்கமான உறவு, பண்பாடு மற்றும் பழக்க வழக்கங்களை அறிய முடிகின்றது.

## References

Annarangachari, (1986) Nachiyar Thirumoli, Madras, India

BSI (2004) Holy Bible, Bible Society of India, Bengaluru, India.

Ilampuranar, (1971) Tolkappiyam Porulathikaram, Kazhaga veliyedu, Chennai, India.

Joseph Beski, (2014) Puthiya Sulthanpet Maraimavatta Varalaru, Aron Anbagam, Palakadu, Kerala, India

Sasivalli, (1985) Tamilar Thirumanam, International Institute of Tamil Studies, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License